## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.60/2021

DW2–சினேகா நாள்.23.07.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் BSc படித்துள்ளேன். ஆங்கிலம் தெரியும். என்னிடம் காட்டப்படும் கனரா வங்கி கடிதத்தில் ரூ.6லட்சம் என் கணக்கிற்கு 27.07.2021 தேதி கேட்பு வரைவோலை மூலம் சிங்காரவேலு கணக்கிலிருந்து மாற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா தலைவாசல் கிளையில் கடிதத்தில் என்னுடைய அப்பாவின் வங்கி கணக்கிற்கு ரூ.7,50,000/–ம் பழனிவேல் கணக்கிலிருந்து 04.03.2021 ம் தேதி மாற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே ஆவணத்தில் ரூ.5,00,023.60–ஐ கீதா கணக்கிற்கு RTGS மூலம் வரவு வைக்கப்பட்டதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். கீதா என் அம்மா ஆவார். என்னிடம் காட்டப்படும் இந்தியன் வங்கி அம்மம்பாளையம் கிளை சான்றில் மலர்கொடி என்பவர் கேட்பு வரைவோலை மூலம் கீதா கணக்கிற்கு ரூ.10,05,900/– செலுத்தியதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மலர்கொடி 4ம் பிரதிவாதியின் மனைவி என்றால் எனக்கு தெரியாது. சிங்காரவேலு வாங்கிய நிலத்திற்காக மேற்படி ரூ.6இலட்சம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்அம்மா மற்றும் என்னுடனும், என் சகோதரருடனும் ஏற்பட்ட கிரய ஒப்பந்ததிற்கு மொத்தம் ரூ.22,50,000/–த்தை 4ம் பிரதிவாதியான பழனிவேல் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. பழனிவேல் என்பவர் எங்களுடன் கிரைய ஒப்பந்தம் செய்து'கொண்டு ரூ.22,50,000/– செலுத்தியதாக சொல்லி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.6/2022 வழக்கு இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியும். அந்த வழக்கும் பாகப்பிரிவினை வழக்கோடு சேர்ந்து நடந்து வருகிறது என்ற விவரம் எனக்கு

தெரியும். கிரைய ஒப்பந்தப்படி தாவா சொத்தை பொறுத்து பழனிவேலுக்கு ஏற்றை ஆற்றுக பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. என் கணக்கிற்கு ரூ.5லட்சம் வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும், ரூ.6 லட்சம் கேட்பு வரைவோலை மூலம் வந்துள்ளது என்றால் சரியல்ல. சிங்காரவேலுக்கு கொடுத்த கிரயத்தை மறைத்தும், பழனிவேலுடன் ஒப்பந்தத்தை மறுத்தும் துர்லாபம் அடையவேண்டி பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.7,50,000/- என்அப்பா வாங்கிய கடனுக்காக One time Settlementல் வங்கி கடன் செலுத்தி அடைக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு பணம் செலுத்தாவிட்டால் அப்போதே வங்கியால் சொத்து ஏலத்திற்கு வந்திருக்கும் என்றால் சரியல்ல. ரூ.6லட்சத்தை பெற்றுக்கொண்ட பின்னர் என் தம்பி பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தம்பி பெயரில் சொத்து வாங்கப்பட்டதை மறைத்து பொய்யாக தகவல் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 11.08.2021 கிரைய பத்திரம் நகல் மூலம் பாப்பாத்தி என்பவரிடமிருந்து என் சகோதரர்களுக்கு கார்டியனாக இருந்து என்அம்மா சொத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு கிரயம் வாங்கி உள்ள விவரம் தெரியும் என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 60/2021 வழக்கின் 3, 4 பிரதிவாதிகளுக்கு அவர்கள் எதிர்வழக்குரையில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. அ.வ.எண்.6/2021 வழக்கின் வாதியான பழனிவேலுக்கு அவர் கோரும் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:</u>

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.